பினருடைய கோரிக்கையை ஈடேற்ற வேண்டுமென்ற வகையில் அதன் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நிதித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

பீளமேடு வ.உ.சி. கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்.

*108—(*வினா எண் 8089)* **திரு. கு. ரமணி :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம் பீளமேட்டில் உள்ள வ. உ. சி. கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் டைரக்டர் போர்டு பல ஆண்டுகளாகக் கூட்டப்படாமல் செயலற்று கிடப்பது பற்றி உறுப்பினர்கள் 7—4—1983 முதல் 9—12—1985 வரையில் பல புகார் மனுக்கள் அனுப்பியும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): புகார் மனுக்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சொசைட்டி இருபது வருஷங்களுக்கு மேலாக முறையாக இயங்கிக் கொண்டு வந்தது. அதனுடைய பிரசிடெண்டாக இருக்கிறவர் இன்சால்வெண்ட் பெட்டிஷனைக் கோர்ட்டில் கொடுத்தவர். அன்றைக்கே அவருடைய பதவி காலியாக வேண்டியது. அதற்குப் பிறகு சட்டப்படி அவருடைய பதவி செல்லாது. அவர் அப்படி போகாமல், கடைசியாக டெபுட்டி ரிஜிஸ்ட்ரார் ஆஃப் ஹவுசிங்கினுடைய கோர்ட்டில் கேஸ் ஃபைல் பண்ணி அவர் டைரக்டர் பதவியில் இருக்கக் கூடாது என்ற தீர்ப்பும், மெம்பராக இருக்கக்கூடாது என்ற தீர்ப்பும் வழங்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்கும் அவர் அந்த நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள தனி அதிகாரியிடம் பொறுப்பை ஒப்படைக்காமல் இருந்து வரும் அக்கிரமம் நடக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு அந்த சொசைட்டியினுடைய ஜெனரல் பாடி கூட்டத்தைக் கூட்டி, புதிய போர்டைத் தேர்ந்தெடுத்து நிர்வாகத்தை அவர்களிடம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே கூட்டுறவு சார் பதிவாளர் நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவிலே சங்கத்தின் பொதுக் குழுவைக் கூட்டவும், புதிய நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதில் வரவேற்கத் தக்கது. ஆனால் இப்போது செய்ய வேண்டிய ஒரு அவசர காரியம் இருக்கிறது. இன்னும் அந்த நீக்கப்பட்ட நபர் கையிலேதான் ஆபீஸ் நிர்வாகம் இருக்கிறது. எனவே, சார் பதிவாளரிடம் உடனடியாக நிர்வாகத்தைக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவரவர்களே, டெபுடி ரெஜிஸ்டிரார் (ஹவுசிங்) அவர்கள் ஏற்கெனவே எடுத்த நடவடிக்கைகள் குறித்து கூட்டுறவுத் துறைப் பதிவாளருக்கு பதில் வந்தவுடன், அதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள், நிர்வாகத்திலே உள்ள குறைபாடு காரணமாக செயல்படாமல் பல இடங்களில் இருந்து வருகின்றன. அப்படிப்பட்ட இடங்களில், முன்பு இருந்ததுபோல், டி. ஆர். கேடரில் செக்கரட்டரி ஒருவரை நியமிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே பல சங்கங்களில் அரசு அதிகாரிகள் செயல்பட்டு வருகிறார்கள். எனவே, எந்த சங்கத்திலாவது செயலர் நியமிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுக் கேட்டால், அரசு அது குறித்து பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கும்.

தாம்பரத்தில் சுங்கத் தீர்வை இயக்க மண்டலத்திற்கு
தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வீடுகள்.

109—(*வினா எண் *9005*) திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்தில் அமைய உள்ள சுங்க தீர்வை இயக்க மண்டலத்திற்காக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் எத்தனை ?